# வீட்டிலிருந்து செய்யும் நடவடிக்கை 1

அன்புள்ள பெற்றோர்களே,

பின்வரும் நடவடிக்கைகளின்வழி வீட்டில் உங்கள் பிள்ளையின் கற்றலுக்கும் வளர்ச்சிக்கும் நீங்கள் ஆதரவு அளிக்கலாம். இந்த நடவடிக்கைகள் கருத்துப்பரிமாற்றத்தையும் குடும்பப் பிணைப்பையும் ஊக்குவிக்கின்றன.

## நீங்கள் உங்கள் பிள்ளையுடன் என்ன செய்யலாம்?

**'ஞாபகம் வருதே! ஞாபகம் வருதே!' நடவடிக்கை**

உங்கள் பிள்ளையோடு சுற்றுலாவுக்குச் சென்ற போதோ குடும்ப நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட போதோ எடுத்த நிழற்படங்கள் சிலவற்றை எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்.
பின், பிள்ளையை அவற்றிலிருந்து ஒன்றை எடுத்து அந்தப் படத்தைப்பற்றி உங்களுடன் பேசச் சொல்லுங்கள். அந்த நிகழ்வின்போது நடந்த சுவையான சம்பவங்களையும் மகிழ்வூட்டிய தருணங்களையும் நினைவுகூர்ந்து கலந்துரையாடுங்கள். நீங்கள் உங்கள் பிள்ளையுடன் பேசுவதற்குப் பின்வரும் கேள்விகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

- இந்தப் படத்தில் யாரெல்லாம் இருக்கிறார்கள்?
- இந்த நிழற்படம் எங்கே எடுக்கப்பட்டது?
- அங்கு என்ன நடந்தது?
- அந்தச் சம்பவத்தின்போது உனக்கு என்ன உணர்வு ஏற்பட்டது? ஏன்?

**'கண்டுபிடி, கண்டுபிடி' நடவடிக்கை**

உங்கள் வீட்டில் இருக்கும் காய்கறிகள், பழங்கள் சிலவற்றை மேசை மேல் எடுத்து வையுங்கள்.
பின்னர், ஒவ்வொரு காய்கறி/பழத்தைப்பற்றி ஒரு கேள்வி கேளுங்கள். பிள்ளையிடம் அதற்கான விடையைக் கண்டுபிடிக்கச் சொல்லுங்கள். பிள்ளையையும் இதேபோல் உங்களிடம் கேள்வி கேட்க ஊக்கப்படுத்துங்கள்.
(எ.டு):

| | |
|---|---|
| பச்சை நிறத்தில் இருக்கும்; சமைத்துச் சாப்பிடலாம். பழுத்தால் அப்படியே சாப்பிடலாம். அது என்ன**?** | வாழைக்காய், வாழைப்பழம் |
| சிவப்பு நிறத்தில் இருக்கும்; கடித்தால் புளிக்கும். அது என்ன**?** | தக்காளி |
| வெள்ளை நிறத்தில் குடைபோல இருக்கும். அது என்ன**?** | காளான் |

காய்கறியின்/ பழத்தின் பெயர், நிறம், சுவை முதலியவற்றைப்பற்றிப் பிள்ளையுடன் கலந்துரையாடுங்கள். இந்த விளையாட்டில் மற்றக் குடும்ப உறப்பினரையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.

**'ஒலியைக் கண்டுபிடி!' நடவடிக்கை**

வீட்டிலிருக்கும் பொருள்களில் வெவ்வேறு ஒலிகளை எழுப்பக்கூடிய சில பொருட்களை எடுத்து வைத்துக்கொள்ளுங்கள். (எ.டு): கரண்டி, புத்தகம், சாவிக்கொத்து, கடித உறை, கண்ணாடிக்குவளை

பிள்ளையைக் கண்களை மூடிக்கொள்ளச் சொல்லுங்கள். பின், எடுத்து வைத்துள்ள பொருள்களால் ஒலியை எழுப்புங்கள். பிள்ளையிடம் அந்த ஒலியை எழுப்பியது எந்தப் பொருள் என்பதைக் கண்டுபிடிக்கச் சொல்லுங்கள். அந்தப் பொருளின் பெயரைத் தமிழில் சொல்ல ஊக்கப்படுத்துங்கள்.

**'எழுதிப் பார்ப்போம்!' நடவடிக்கை**

ஒரு தட்டில் பாசிப்பருப்பு அல்லது பச்சைப்பயற்றை எடுத்து வைத்துக்கொள்ளுங்கள். அதில் பிள்ளையைத் தான் கற்றுக்கொண்ட எழுத்து ஒன்றைத் தன் ஆள்காட்டி விரலால் எழுதச் சொல்லுங்கள். அந்த எழுத்தின் ஒலிவடிவத்தை உரக்கச் சொல்லச் சொல்லுங்கள். அந்த எழுத்துக்கொண்டமைந்த சொற்களைச் சொல்லச் சொல்லுங்கள்.

**உங்கள் பிள்ளையுடன் இந்த நாளை மகிழ்ச்சியாகக் கழியுங்கள்!**